விலை முக்காலணா | இலங்கை 8 சதம்

சந்தா விவரம்

1 ஆண்டு ரூ. 18-0-0
6 திங்கள் ரூ. 9-0-0
3 திங்கள் ரூ. 4-8-0

தனிப்பிரதி முக்காலணா. மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

மாலைமணி

(திராவிடர் தமிழ் தினசரி கருத்திதழ்)

ஆசிரியர் : மு. கருணாநிதி

MALAI MANI | Most Popular in the South

விளம்பர விகிதம்

அங்குலப் பத்தி ஒன்று ரூ. 5-0-0
நீடித்த விளம்பரங்களுக்கு சலுகையுண்டு,
மானேஜர்
"மாலை மணி"

Phone: No. 4502

மாலை 2 | சென்னை : 21—5—51 ஞாயிற்றுக்கிழமை ★ வெளியூர் : 22—5—51 திங்கட்கிழமை | மணி 164

பிற்போக்குத் தன்மை முறியடிக்கப்பட வேண்டும்

…………(o)…………

நாட்டை அவலநிலைக்கு உட்படுத்த விடக்கூடாது

————(:0:)————

தியாகத் தழும்புகளை தித்திப்போடு ஏற்கும் தீரராகத் தயார்

திண்டிவனம், மே 21

நேற்றைத் திண்டிவனம் காவேரிப்பாக்கத்தில் நாகம்மையார் பந்தலில் வேலாயுத அரங்கில் நடைபெற்ற சமூக சீர்திருத்த மாநாட்டில் தோழர் ஆ. தங்கவேலு அவர்கள் நிகழ்த்திய வரவேற்புச் சொற்பொழிவின் விளக்கம் வருமாறு:—

பேரன்புகொண்டவரே! பெரியவரே! பெற்றெடுத்த தாய்மாரே! இளஞ்சிங்கங்காள்.

திண்டிவனம் திரள்கடலெனக் காட்சியளிக்கிறது இன்று. கடல் அலையெனச் செறிந்து நிற்கிறது உணர்ச்சிப்பெருக்கு. சமூக சீர்திருத்த மாநாட்டுக்குப் பல்லாயிரவர் தாங்கள்கூடி எங்களைச் சிறப்பித்து ஊக்கம்—உற்சாகமெனும் ஊசி மருந்தை நல்கி உதவுவதற்கு வரவேற்புக்குழுச் சார்பில் நன்றியும் வணக்கமும் தெரிவித்துக் கொள்கிறேன். நாட்டின் பல்வேறு பகுதிகளினின்றும் அன்பு கலந்த அக்கரை உள்ளத்தோடு--உணர்வு கலந்த ஒருமைப்பாட்டோடு--அறிவுடன்பட்ட பொதுநல நோக்கோடு தொண்டினைத் தெரிந்த தியாக உணர்வோடு ஆயிரமாயிரமாய்வந்து திரண்டிருக்கும் உங்களனைவரையும் வருக! வருக!! என வரவேற்கிறேன்! தங்கள் வரவு நல்வரவாகட்டும்! தங்களது ஒருமித்த முடிவு நாட்டு நலனுக்கும் முன்னேற்றத்துக்கும் உதவட்டும் என விழைகின்றேன்.

தோழர்களே!

சமூக சீர்திருத்தமாநாடு என்ற பெயரில் நாம் கூடியுள்ளோம். பொதுநல ஆர்வமும், சீர்திருத்த நோக்கமும், தொண்டுச் சிறப்புமிகு நம் மதிப்புக்குரிய பெருந்தகை நாரண துரைக்கண்ணன் அவர்கள் நம் மாநாட்டுக்குத் தலைமையேற்க இசைந்தது நமக்கெல்லாம் பெருமகிழ்வைத் தருவதோடு பெருமையையும் அளிக்கிறது. அன்னவரின் அரும் பெரும் தலைமையில் அரிய நல் முடிவுகளைக் காண்போமென நினைக்கும்போது, நாட்டு நலத்தில் நல்லெண்ணமும் அக்கரையும் கொண்ட நமக்கெல்லாம் பூரிப்பு ஏற்படுகிறது. தனது ஒப்பற்ற நடிப்பினாலும்-இணையற்ற இசையினாலும்-ஈடு ஒப்பற்ற அழகு நடைப் பேச்சாலும் நாடக-திரைப்பட உலகில் புரட்சியும் புத்துணர்வும் ஏற்படுத்திச் சீர்திருத்தக் கருத்துக்களை சர்க்கரை மூடிக்குள் வைத்தளித்து வரும் நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி அவர்கள் நம் மாநாட்டைத் துவக்கி வைக்க முன் வந்தது, நமக்கெல்லாம் மகிழ்ச்சி தரத்தக்கதாகும். சமூக முன்னேற்றப்பணியே தங்கள் வாழ்க்கை லட்சியமெனக் கொண்டு நாட்டுக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட கழக முன்னணி வீரர்கள் பலரும் உலகைத் திருத்திய உத்தமர்கள் பற்றியும், உன்னத கோட்பாடுகள் பற்றியும் கருத்துரை வழங்கக் களிப்புடன் வந்தது நம்மை மேலும் இன்பக்கடலில் ஆழ்த்துகிறதென்றால் அது உயர்வு நவிற்சியாகாது. நண்பர்களே! உங்களனைவர் சார்பிலும் மாநாட்டு வரவேற்புக்குழுச் சார்பிலும் நம் அன்பு-மரியாதைக்குரிய தலைவர்

4-ம் பக்கம் பார்க்க

வியட்நாம் போர்

பிரெஞ்ச் கப்பல் வெடித்தது

……

2 ரயில்வண்டிகள் கவிழ்ந்தன

செய்கோன், மே. 20—

இந்தோசீனாவில் வியட்நாம் படைகளும் பிரெஞ்ச் படைகளும் சளைக்காமல் போரிட்டுக்கொண்டு வருவதால் வெற்றி தோல்வி மாறி மாறி இருதரப்பாருக்கிடை ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன.

புதிய பெரிய தாக்குதல்களுக்கு வியட்நாம் படைகள் ஏற்பாடு செய்துள்ளன எனத் தெரிகிறது. இவர்களின் தாக்குதல் அதிகரித்திருப்பதாகப் பிரெஞ்சுக்காரர்கள் கூறுகின்றனர்.

டாங்குகள் கொண்டு போயிறக்கும் பிரெஞ்சுக் கப்பல் ஒன்று துறைமுகத்தில் கட்டியிருந்தபோது வெடித்துவிட்டதால் ஒரு கடற்படையதிகாரி உட்பட 50 பேர் கொல்லப்பட்டு 130 பேர் காயமடைந்தனர்.

செய்கோனுக்கு வடக்கே 25 வது மைலில் பிரெஞ்ச் சாமான் ரயில் வண்டி ஒன்று கவிழ்க்கப்பட்டது. இதனால் ஒருவர் மாண்டு 3 பேர் காயமடைந்தனர். இதே பாதையில் நேற்று ஒரு ரயில் வண்டிகவிழ்க்கப்பட்டது. பிரெஞ்ச் படைகள் போரில் 48 வியட்மின் வீரரைக் கொன்று 150 பேரைக் காயப்படுத்தின. சீன எல்லைக்கு 20 மைல் தொலைவில் உள்ள பின்லூ எனுமிடத்தைப் பிரெஞ்ச் படைகள் கைப்பற்றின.

———

இந்தியாவுக்கு இலவச அரிசி

———

பிரிட்டிஷ் கயானாவின் நல்லுணர்ச்சி

ஜியார்ஜ்டவுன், மே 20—

இந்தியாவில் ஏற்பட்டுள்ள கொடிய உணவு நெருக்கடியைத் தீர்க்க இந்தியாவுக்கு 5000 மூட்டை அரிசியை ஏற்றியனுப்பி வைக்க பிரிட்டிஷ் கயானா அரசாங்கம் அனுமதித்திருக்கிறது. இந்த அரிசியின் விலையை பிரிட்டிஷ் கயானாபொதுமக்களின் நன்கொடையிலிருந்து ஈடுபடுத்திக்கொள்ளப்படுமாம்.

கொரியா போர் :

அமெரிக்கர்மீது மரங்கள் பாயும் விந்தை

———

கொரியாவில் போரிட இந்தியப்படைகள் வேண்டுமாம்

வாஷிங்டன், மே 20—

ஐ. நா. படைகளுடன் சேர்ந்து வட கொரியரை எதிர்க்க, இந்தியாவும் பாக்கிஸ்தானும் துருப்புக்களை அனுப்பிவைக்க வேண்டுமென அமெரிக்கா ஆலோசனை கூறியுளது. இந்தியாவோ, பாக்கிஸ்தானோ துருப்புகளை யனுப்பிவைக்கப் போவதில்லை என்று உறுதியான முறையில் தெரிகிறது.

நேற்றுக்காலை கொரியா பூசான் நதிப்பள்ளத்தாக்கில் அமெரிக்கர் பாசறை நோக்கி ஒரு காடே நகர்ந்ததைப் பார்த்த அமெரிக்கர் மிரண்டு ஓடிவிட்டனர். அதாவது மரங்கள் நின்ற நிலையில் அமெரிக்கரை நோக்கி அப்படியப்படியே நகர்ந்து வந்தனவாம். அமெரிக்கப் பாசறையை நெருங்கியபின், மரங்களின் பின்னிருந்த சீனப் படைகள் திடீரெனக் குதித்துத் தாக்கவே, அமெரிக்கர் பயத்தால் ஓட்டம் பிடித்துவிட்டனர்.

———

நெசவாளர் அறப்போர்!

சென்னை, மே 20—

இன்று, நெசவாளர் 11 பேர் கைதுசெய்யப்பட்டு போலீசாரால் வானில் ஏற்றிச் செல்லப்பட்டனர். மற்றும், வண்ணாரப்பேட்டையிலிருந்து 11 பேர் 52 பேர் கொண்ட இரு குழுக்கள் தங்கசாலை வழியாக கோட்டை முன் மறியல் செய்யச் செல்லும்போது போலீசாரால் கைது செய்யப்பட்டனர்.

மௌண்ட்ரோடிலிருந்து 5 நெசவாளர் ஊர்வலமாக வந்தவர்களும் கைது செய்யப்பட்டனர் மைலாபூரிலிருந்து 19, 25 பேர்கள் ஆண்-பெண் நெசவாளர் மறியல் தொண்டர்களும கைது செய்யப்பட்டனர்.

———

சென்னை, மே 20—

விரைவில் பம்பாய், ஆமதாபாதிலிருந்து வேஷ்டிகள் உட்படபல ரகங்களில் அதிக மில் துணிகள் சென்னைக்கு வருமென சாமான்கள் கட்டுப்பாடு அதிகாரி அறிவித்தார்.

மாலை மணி

சென்னை 21—5—51 திங்கட்கிழமை

குருடன்-கோழை-கிழவி!

யானையைத் தடவிப் பார்த்தான். கால்களின் சுற்றளவை—காதின் அகலத்தை-முதுகின் நீளத்தை தடவிப்பார்த்தான். பிறவிக் குருடன். தான் தெரிந்து கொள்ளவேண்டுமென்று ஆசைப்படுகிற பொருள்களைத் தடவிப் பார்த்து ஆறுதல் அடைகிற சுபாவம் அவனுக்கு. யானையைத் தடவிப்பார்த்தவனிடம் சுற்றியிருந்தவர் கேட்டனா 'யானை எப்படி இருக்கிறது?' என்று! சடக்கென பதில் சொன்னன் குருடன், பூனை மாதிரி இருக்கிற தென்று!

முரசு முழங்கிற்று போர்வீரர்கள் அணி வகுத்துப் புறப்பட்டனர். வாள்கள் உராய்ந்தன வேல்கள் பறந்தன. ரத்த ஆறுஓடிற்று தேர்கள் சாய்ந்தன. தலைகள் உருண்டன. ரணகளத்தில் பாய்ந்து வந்த ஈட்டி ஒன்றுக்குப் பதில் சொல்ல வசையற்று போர்த்தளபதி ஓட்ட மெடுத்தான். அன்றிரவு பாசறையில் போர்பற்றிப்பேச்சுநடந்தது. தளபதி கூறினன்; எதிரிகள் ஏமாளிகள் என்று! ஆமாம் புறமுதுகிட்டு ஓடியவன்தான் கூறினன் எதிர்ப்படையைக் கோழைப் படை என்று!

பவுடர் பூசிக் கொண்டாள் கண்ணுக்கு மை தீட்டிக்கொண்டாள். கன்னங்களில் ரோஜா கலரைப பூசினள். உதட்டிலே சாயம் தடவினள், போலிப் பற்களை எடுத்துப் பொருத்தினள், மூன்றங்குல நீளமுள்ள கூநதலை மூன்று முழ சவரியினல் ஜடை போட்டாள். கண்ணுடியில்பார்த்துக் கொண்டாள். அப்போது கூட அவளுக்கு ஐம்பது வயதாகி விட்டது என்பது அவளுக்கே தெரிந்தது. எதிர்த்த வீட்டுச்சிங்காரி-பதினறு வயதும் நிரம்பாத பாவை-வந்தாள். அவள் அணிகள் தேவையில்லாத அழகு ராணி. அழகு ராணியை இந்த அழுகல் ராணி பார்த்தாள். பொருமை பூத்தது. "போடி நாயே! நான் தாண்டி அழகு மயில்" என்று ஆடித் தீர்த்தாள் ஐம்பதைமுடித்துக் கொண்டவள்.

குருடன் யானையைப் பூனை என்ருன். தெரியாமலல்ல... தெரிந்துகொண்ட பிறகும் விஷமத்தனமாகப் பதில் சொன்னன்.

கோழைத் தளபதி எதிரிப்படையை வீரமற்றவர் என்று வீண்மொழி வீசினன்.

கிழவி குமரியைக் கிண்டல் செயதாள்; தான்தான் அழகியென்று!

"நம் மாகாணத்திலும் ஏன் இந்தியா பூராவிலும் எந்த எதிர்க்கட்சியும் காணேம. சோஷலிஸ்டுகளையும் சரியான எதிர்க்கட்சியாகக் கருத முடியாது. கொள்கையற்ற எதிர்க்கட்சி கூடாது. அதனல் நாட்டிற்கே தீங்குதான் திராவிடக் கட்சிக்குப் பதவியில் நிரம்ப ஆசை உண்டு. ஆனல் மக்களிடமிருந்து 'வோட்' கிடைக்குமென்ற நம்பிக்கை அவர்களுக்கு இல்லாததால் தேர்தலில் போட்டிபோட அவர்கள் முன்வரவில்லை. கறுப்புச் சட்டைக்காரன் வெள்ளைக்காரனுக்கும் சிவப்புச் சட்டைக்காரன் மாஸ்கோவுக்கும் அடிமைப் படுத்த வேண்டுமென்ற அடிப்படை ஒற்றுமை கொண்டவர்கள். ஆகவே இவர்களுக்கு எவரும் 'ஓட்' போடப்போவதில்லை"

திருமங்கலம் தாலுக்கா அரசியல்மாநாட்டிலே இப்படிப் பேசியிருக்கிருர். யார் பேசியது? சாதாரணமானவரா? ...ஓட்டை உடைசல் செம்புப் பித்தளையா? ...சில்லறையா? ... சின்னதா?... தலைகொடுக்கும் சிப்பாயா? ... காசுக்குத் திட்டும் போலிக்கவிஞர் கூட்டமா? இல்லை இல்லை! அந்தக் குட்டிச் சுவற்றுக் குயில்களில் யாருமில்லை. தமிழ் நாட்டு ராஷ்டிரபதி தோழர் காமராஜர் தான இவ்விதம் கர்ச்சனை புரிந்திருக்கிருர். எதிர்க்கட்சிகளேகிடையாதாம். இதைவிட திமிர்வாதம கேள்விப் படடிருக்க முடியாது நாம். எதிர்க்கட்சி பல மற்றதாம் எதிர்க்கச் சக்தியற்றதாம். யானையைப் பூனை யென்கிற விஷமக்கார குருடனுக்கும் இவருக்கும் என்ன வித்தியாசம்! புலியைஎலி யென்கிருரே காமராஜர்; இவைப் பொய் வாதம் என்பதா? புன்மை என்பதா? காமராஜர் நிதர்சனமாகக் கண்டிருப்பாரே எதிர்க்கட்சியின் பலத்தையும்-சொந்தக் கட்சியின் பலத்தையும்! என்—அவர் கர்ச்சித்திருக்கும் திருமங்கலம் மாநாடு நடந்த இடம் கவுடர் டாக்கீஸ். தியேட்டர்களில் மாநாடு கூட்டினல்தான் மானம் காப்பாற்றப்படும், இருநூறு பேர் கூடினல் இரண்டாயிரம் பேராகவாவது கண்ணுக்குத் தெரியும், என்ற எண்ணத்தின் பேரில் மாநாடு நடத்துகிற இந்த மகானுபாவர்களை நமக்கு நன்ருகத் தெரியும்.

மாநாடு என்று கண்ணைப்பறிக்கும் விதத்தில்—கருத்தைக் கிளறும் விதத்தில்—விளம்பரங்கள் செய்துவிட்டு பந்தலுக்குள் பத்து பேர் இருப்பதைப் பார்த்து பரிதாப உருவங்களாக மாறும் இந்த வீராதி வீரர்களின் 'பவிஷு' சிறிது நாட்களாக வெளிச்சமாகித்தான் வருகிறது. இருந்தாலும் இறுமாப்பு போகவில்லை. யானையைத் தடவிப் பார்த்து பூனை என்கிருர்கள். பலமில்லாத எதிர்க்கட்சி-திராவிடர் இயக்கம்-நடத்திக் காட்டிய போராட்டங்கள் கண்டு நடுங்கியவர்-நாக்குழறப் பேசியவர்-நண்பர் காமராஜர்! ஆனலும் எதிர்க்கட்சியினர் திறமையற்றவர்என்கிருர், பாசறையிலேதோள் தட்டிக் கொண்ட படைத் தலைவனைப்போல! மூச்சுத்திணற ஓடி வந்த கையாலாகாத சேனைதிபதி ..."முடியுமா எதிரிகளால் நம்மை எதிர்க்க" என்று கேள்வி எழுப்புகிருன். காமராஜரோ..."காங்கிரசுடன் திராவிடக் கட்சி போட்டிபோட இயலுமா?" என்று மார்தட்டுகிருர். வேடிக்கையான மனிதர், விசித்திரமான வீரம். வீரமில்லாவிட்டாலும் விவேகத்தை விலைகூருமலாவது இருந்திருக்கலாம் விருதுநகர வாசி. அய்யோ பாவம் அதையும் விற்றுவிட்டு வெத்து வேட்டுக் கிளப்புகிருர்.

பவுடர் போட்டு---மினுக்கிக் கொண்ட கிழவி 'நான் சுயம்வர மண்டபத்திற்குப் போகிறேன், வருகிருயடி நீயும்?" என்று வாலிபப் பெண்ணிடம் கேட்க...அவள் அந்த வயோதிக மாதை ஏறிட்டுப் பார்க்காமல் தன் வீட்டுக்குச் சென்றுவிட, உடனே கிழவி, "பார்த்தாயா அந்தக் குமரிக்கு அழகில்லை...அதனல் வர மறுக்கிருள்; நான் போகிறேன் பார்... ஏன் என்ருல் எனக்கு அழகு வடிகிறது" என்று கூறிக்கொண்டால் அவளைப்பற்றி என்ன நினைப்பது?—அந்தக் கிழவியின் நிலைமையிலே தமிழ் நாட்டு ராஷ்டிரபதி பேசுகிருர்.

வெள்ளைக் காரனுக்கு அடிமைப் படுத்த நினைக்கிரூமாம். இதையும் அந்த விவேக புருஷர்தான் விளம்புகிருர். அமெரிக்காவின் அடிபீடத்திலே அமர்ந்து அமெரிக்க ஆண்டவனை அர்ச்சிக்கும் இந்த அசகாய சூரர்கள் நம்மைப் பார்த்து வெள்ளைக்காரன் அடிமை—மாஸ்கோ கூலி—என்று பேசினல் எவ்வளவு தூரம் அறிவை இழந்துவிட்டார்கள்; அறிவை இழந்தது மட்டுமல்ல ஆணவம் பிடித் தலைகிருர்கள்என்று தெரிகிறது!

திராவிடக் கட்சிக்குப் பதவியில் ஆசையாம்: யார் கூறுவது? பனிரெண்டுவருட காலமாயப் பதவியில் ஒட்டிக்கொண்டு மந்திரிகளுக்கு நாற்காலி மாற்றிக்கொண்டிருக்கிருரே; அவர் கூறுகிருர், நம்மைப் பதவிப் பித்தர்கள் என்று!

நமக்குத் தெரியும்...பதவி என்ருல் என்ன? அதனுடைய பெருமையை காங்கிரஸ்காரர்கள் எப்படி பாழ்படுத்திவிட்டார்கள். பதவியை பர்மிட்டாக மாற்றி அதன் பண்பைக் குறைத்தார்கள். பதவியை எலும்புத் துண்டாக ஆக்கி அதன் எழிலை அழித்தார்கள்......

தேர்தல் என்ருல் நமக்குத் தெரியாதா எப்படி என்று! வெற்றி காணும் முறைகள் அறியாதவர்களா நாம்! "தேர்தலிலே கலந்து கொள்ளப் போவதில்லை. எங்கள் லட்சியம் இன்பத் திராவிடம். அதற்கான பலத்த திட்டங்கள் வகுக்கப்பட்ட பிறகு...திராவிடம் பிரிய தேர்தலிலும் நிற்கவேண்டும் என்ற அவசியம் ஏற்பட்டால்... அப்போது சந்திப்போம் காமராஜரை, தேர்தல் களத்தில்!" என்று பலமுறை அறிவித்திருக்கிரூமே! தேர்தல் நமக்கு விஷமல்ல! வேண்டாம் என்று அறவே விடப்பட்டதுமல்ல! தேவையென்றுபடும் போது கலந்துகொள்ளத்தான் போகிறது தி. மு. கழகம், தேர்தலில்! அதற்குள் காமராஜர் கண்டபடி கதறிக் கொண்டிருக்கக் காரணம் தெரியவில்லை. ஏதோ ஒரு கலக்கம் அவர்கண்ணையும் கருத்தையும் கெடுத்துவிட்டிருக்கிறது. அதனல்தான் காமராஜ் குருடன்-கோழை-கிழவி—இந்த மூவரின் பிரதி பிம்பமாகக் காட்சி தருகிருர். பரிதாபத்துக் குரியவர்.

சுழல் விளக்கு

-[மாலுமி]-

திராவிட ஸம்பத்து

கண்ணை மூடிக்கொண்டே படுத்திருப்பார்கள். திடுக்கென கத்துவார்கள் 'அய்யோ அப்பா' என்று! இப்படி சில அரசியல் நோயாளிகள் இருக்கிருர்கள். நான் நோயாளி என்கிறேன்; அதை அவர்கள் 'ஸ்டண்ட்' என்பார்கள். வாயை மூடி வாலைச்சுருட்டி உட்கார்ந்திருப்பது. எதிர்பாராத நேரத்தில் எழுந்து பாய்வது. அந்தப் பாய்ச்சலிலே பயன் இருந்தால் மேலும் மேலும் தாவுவது. இல்லாவிட்டால் பழையபடியே மரக்கிளையில் தூங்குவது. இது நமது அக்கிரகாரத்தின் பிரதிநிதி—அம்மாமிகளின் அபிமானச்செல்வன் ஆனந்த விகடனுக்குப்பழக்கமான சமாச்சாரம்.

தென்னட்டுசெல்வங்களைப்பற்றி எழுத ஆரம்பித்தது சமீபத்து ஒரு பாய்ச்சல் பாய்ந்திருக்கிறது. 'திராவிட சம்பத்து' என்று தலைப்பு-அதிலே விகடனின் வால் விநோதமாக-விசித்திரமாக-விபரீதமாக ஆடுகிறது.

"மகிஷாசுர மர்த்தனியின் கதை ஒரு பழைய திராவிடக் கதையாக இருந்து புராணம் புகுந்திருக்கும் என ஊகிப்பது தவருகாது" இப்படி எழுதியிருக்கிறது முதலில். எனக்கு ஆச்சரியமாகப் போய்விட்டது. நாம் படிப்பது ஆனந்தவிகடன்தானே என்று திருப்பிப் பார்த்துக்கொண்டேன்.

திராவிடக் கதைகளில் புராணம் புகுந்துவிட்டது. இதைச் சொல்வது சாதாரண விஷயமா? அதுவும் விகடன், வேத விற்பன்னர்களின் ஏகக்குரல்—அது எழுதுமா இப்படி? எழுதியிருக்கிறது. எனவே வியப்படைந்தேன்.

திராவிடக் கதைகளில் புராணம் புகுந்துவிட்டது. எவ்வளவு அற்புத

(3-ம பக்கம் பார்க்க)

15,600 பேருக்கு இவ்வாண்டு காலேஜ் படிப்பு

சென்னைப் பல்கலைக்கழகக் காலேஜ்களில் இடமிருக்கிறது

சென்னை, மே 20—

இவ்வாண்டு ஜூலை மாதத்தில் சென்னைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த காலேஜ்கள் மீண்டும் திறக்கப்படுகின்றன இவ்வாண்டு 7 புதிய காலேஜ்களும் சென்னைப் பல்கலைக் கழகத்தில் இணைப்புப் பெறுகின்றன.

இவற்றுள் 2 முதல்தாக் காலேஜ்கள்; 4 இரண்டாம்தரக் காலேஜ்கள். இந்த நான்கில் ஒன்று பெண்கள் காலேஜ். இவ்வாறு தவிர, ஒன்று தனிப்பட்டவர்களால் துவக்கப்படும் இஞ்சினியரிங் காலேஜ்

முதல்தரக் காலேஜ்களில் ஒன்று சென்னையிலும், ஒன்று திருச்சியிலும் அமைகின்றன. மற்ற 4 சிவகங்கை, திருப்பத்தூர் (வ-ஆ) தூத்துக்குடி முதலியவிடங்களில் அமைகின்றன. திருப்பத்தூர் காலேஜில் மெக்கானிக்கல் இஞ்சினியரிங் கற்பிக்கப்படும்.

இப்போதுள்ள 2-ந்தரக் காலேஜ்கள் மூன்று முதல்தரக் காலேஜ்களாகும். இவற்றுள் 2 பெண்களின் காலேஜ்களாகும்.

பீளமேட்டிலுள்ள (கோயமுத்தூர்) பி. எஸ். ஜி. டெக்னலஜி கலேஜில், 75 மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள அனுமதியளிக்கப்பட்டுள்ளது இக்காலேஜில்மெக்கானிக்கல், எலெக்ட்ரிக்கல் இஞ்சினியரிங் கற்பிக்கப்படும்.

இந்தப் புதிய காலேஜ்களில் 900 மாணவர்கள் ஜூனியர் இண்டர் மீடியட் வகுப்பில்சேர இடமிருக்கிறது.

1951 ஜூலையில் சென்னைப் பல்கலைக் கழகத்தில் இணைக்கப்பட்டுள்ள காலேஜ்களில் மட்டும் எஸ். எஸ். எல். ஸி., மெட்ரிக் குலேஷன் முதலியவை பாஸ் செய்துவிட்டு வரும் மாணவர்களுக்கு ஜூனியர் இண்டர் மீடியட் வகுப்பு ஸ்தானங்கள் சுமார் 15,600 இருக்கின்றன. ஜூனியர் டிக்ரீ வகுப்புகளில் 6400 ஸ்தானங்கள் இருக்கின்றன. பி. காம் பாடத்திட்டத்தில் 950 ஸ்தானங்கள் இருக்கின்றன.

இவை தவிர 10 ஆசிரியர் போதனுமுறைக் காலேஜ்கள 700 பேருக்கு இடமளிக்கின்றன. இவற்றுள் பாலக்காட்டிலிருந்த காலேஜ் இந்த ஆண்டு கோழிக்கோட்டுக்கு மாற்றப்பட்டது.

1950 ஜூலையில் அதாவது கடந்த ஆண்டு, 14,214 ஸ்தானங்கள் ஜூனியர் இண்டர்மீடியட் வகுப்பில் இருந்தன. ஆனல் அந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை விஞ்ஞான வகுப்புகளில் 236 ஸ்தானங்களும், மற்றவற்றில் 1138 ஸ்தானங்களும் பூர்த்தியாகாமல் காலியாகவே இருந்தன என்று இப்போது அறிவிக்கப்படுவது தான் கவனிக்கப்பட வேண்டிய விஷயம்.

சென்னைக்குப் பயறு அனுப்பத் தடை

—

உத்தரப்பிரதேச ஆட்சியின் நலலெண்ணம்?

லக்ஷ்மணபுரி, மே 20—

உத்தரப்பிரதேசத்திலிருந்து தமிழ்நாடு தனக்குத் தேவையான பயறு வகைகளை வரவழைத்துக் கொண்டிருந்து தற்போது உ. பி. ஆட்சியினர் பயறுவகைகளை வெளி மாகாணங்களுக்கு அனுப்பக் கூடாதெனத் தடை பிறப்பித்துவிட்டனர் இதன் பயனுகத் தமிழ்நாட்டிற்குப் பயறு வகைகளே கிடைக்காமற்போய்விடும், இப்பஞ்ச காலத்தில் இவ்வாறு செய்வது சரியல்லவென்றும் இத்தடையை ரத்து செய்யுமாறும் இந்திய அரசாங்கத்துக்குத் தமிழ்நாட்டுத் தானிய வர்த்தகர்கள் சங்கம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

....

இந்திய எல்லையில் கம்யூனிஸ்ட்கள்

புதுடில்லி, மே 19—

இந்தோ-பர்மா எல்லையில் சில மாதங்களுக்குமுன் கம்யூனிஸ்ட்கள் நடமாட்டமிருந்ததென்றும், திரிபுராவில் சில கம்யூனிஸ்ட்கள் நுழைந்துவிட்டனரென்றும் அது பற்றிய தகவல் இன்னும் சரியாகக் கிடைக்கவில்லையென்றும், மணிப்பூரில் கம்யூனிஸ்ட்கள் தாக்குதலால் ஒரு ஜெளக்கிதார் உட்பட 5 பேர் கொல்லப்பட்டு, 2 பேர் காயமடைந்தனர். போர் வீரர் ஒருவரும் கொல்லப்பட்டார். இங்குக் கம்யூனிஸ்ட்கள் 30 கொள்ளைகள் நடத்தி, ரூ. 19,909 எடுத்துச் சென்றனர் என்று நேற்று யூனியன் பார்லிமெண்ட்டில் அறிவிக்கப்பட்டது.

தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

நரசிங்கபுரம்

திருவள்ளூர் வட்டத்தைச் சேர்ந்த நரசிங்கபுரம் கிராமத்தில் 15-5-51-ல் தி. மு. கழகத் துவக்க விழா நடைபெற்றது. அதுசமயம் கடம்பத்தூர் மறுமலர்ச்சிக் கழகத் தோழர் மலையப்பன் அவர்களால் கொடியேற்றப்பட்டது. தக்கோலம் செல்லப்பன் தலைமையில் காஞ்சி கலியாணசுந்தரனுர் கழகத்தின் கொள்கைகளைப் பற்றியும் இப்போதைய அரசியலாரின் போக்குகளைக் கண்டித்தும் சுமார் ஒரு மணிநேரத்திற்குமேல் சொற்பொழிவாற்றினர். இக்கூட்டத்திற்கு தக்கோலம், கடம்பத்தூர், திருவள்ளூர் ஆகிய ஊர்களிலிருந்தும் கழகத் தோழர்கள் வந்திருந்தனர். நன்றிகூறலுடன் கூட்டம் இனிது கலைந்தது.

சுழ விளக்கு...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மான உண்மை இதைச் சொன்னதற்காக எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறோம் நாம்.

திராவிடக் கதைகளில் புராணம் புகுந்தவிட்டது. ஆமாம்; ராமாயணம் திராவிடக் கதை, ராமனுக்கும் ராவணனுக்கும் நடந்த போர் பற்றி எழுந்த திராவிடக் கதை. அதில் புராணம் புகுந்துவிட்டது என்று கூறினேம். அதை எதிர்த்தார்கள்; இப்போது விகடன் கூறுகிறது... மகிஷாசுரமர்த்தனி என்ற திராவிடக் கதையில் புராணம் புகுந்து விட்டது என்று!

நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறோம்; தாமதமாகவாவது புத்தி வந்ததே என்று! ஆனல் விகடன் அவ்வளவு பைத்யக்காரனல்லவே...... பழைய பழக்கத்தை அறவே விட்டுவிடவில்லை. கட்டுரையின் முடிவிலே கொஞ்சம் விஷத்தையல்லவா கக்கியிருக்கிறன்.

எங்கே திராவிடக் கதை என்று கூறுவதால் ‘திராவிடநாடு’ பிரச்சினைக்கு இடங் கொடுத்துவிடுவோமோ என்று பயந்துகொண்டு “திராவிட சம்பத்து என்றால் அப்படி ஒரு இனம் இருந்ததாகவோ இருக்கிறதாகவோ நாம் ஒப்புக் கொள்ளவில்லை.”

விகடனின் விஷமத்தைப் பாருங்கள். ‘‘இனவெறிக்கொள்கை, ஒரு ‘மித்’ (Myth) அதாவது புராணக் கற்பனை என்கிருர்கள் இன்றைய விஞ்ஞான அறிஞர்களும்ஆராய்ச்சியாளரும்”

விஞ்ஞான அறிஞரை, ஆராய்ச்சியாளரை எதற்குப் பயன்படுத்துகிறர் கவனியுங்கள் விகடனர்! இனவெறிக்கொள்கை ஆகாதென்கிருர்களா அறிஞர்கள். இந்த வார்த்தைகளை வைத்துக்கொண்டு நம் இன முழக்கத்தைப் பாழாக்க கனவு காண்கிறர் நகைச்சுவைக் குராங்கார்!

இனவெறி கூடாதுதான். அதைத்தான் ஆரிய இனத்துக்கு நாம் அடிக்கடி சுட்டிக்காட்டி வருகிறோம். மனிதனைத் தொடக்கூடாது என்ற மமதையை-மகேஸ்வரனை நீதான் பூஜை செய்யவேண்டும் என்ற மண்டைத்திமிரை-இனவெறியை-விட்டுவிடு என்று கூறுகிறோம். நமக்கு ஏற்பட்டிருப்பது இனவெறியல்ல இனப்பற்று. இனவெறி...இன்னொரு இனத்தை அழித்து, அடக்கி தன் இனத்தை வளர்ப்பது. இனப்பற்று...தன் இனத்தைப் பாதுகாத்து இன எழுச்சி ஏற்படுத்துவது.

முன்னது ஆரிய முறை. பின்னது திராவிடர் முறை. நம் முறை.

விஷமம் செய்யஎண்ணிய ஆரிய ஆஞ்சநேயர் முன்னுக்குப்பின் முரணில்லாமலாவது எழுதினரா என்றால் அதுவுமில்லை.

முதலில் திராவிடக் கதையில் புராணம் புகுந்தது என்று நமது குரலில் பேசினர்.

பிறகு இனவெறிக் கொள்கை கூடாது என்று அவர் மொழியில் கர்ச்சித்தார்.

இறுதியில் அதற்கு ஆக்கந்தேடுவதற்காகப் புறப்பட்டுஆப்பசைத்த குரங்காகிருர், பாபம்! ‘‘திராவிட சம்பத்து என்றால் திராவிடமொழி வழங்கும் பிரதேத்தில் போற்றிப் பாதுகாக்கத்தக்க பெருஞ்செல்வம் என்றுதான் பொருள்”

விகடரின் விளக்கம் போகும் போக்கு இப்படி! திராவிட இனத்தை மறுத்தவர்—அப்படி ஒரு இனம் இருந்ததில்லை என்றவர்—திராவிட மொழியை ஒத்துக் கொண்டு அது வழங்கிய பிரதேசத்தையும் ஒத்துக்கொண்டிருக்கிருர்

ஆங்கில மொழி வழங்கிய இடம் ஆங்கிலநாடு பிரஞ்சு மொழி வழங்கிய நாடு பிரான்சு நாடு. திராவிடமொழி வழங்கிய நாடு திராவிட நாடு என்பது ஏனே தெரியவில்லை ஆனந்தவிகடருக்கு? தெரியாமலில்லை. தெரிந்தும் அதை மறைக்கும் தைரியம் இன்னும் கொஞ்சம் ஒட்டிக்கொண்டிருக்கிறது அவருக்கு! பிரதேசம், நாடு, இவற்றை விட்டுவிடுவோம். திராவிட மொழி பேசியவர்கள் திராவிடராய்த்தானே இருக்கவேண்டும் விகடரே. கிரேக்க மொழி பேசியவர்கள் கிரேக்கர் என்பதுபோல. விகடரே! விஷமத்தனத்தால் உண்மைகளை விஷமாக்குவது உமது பாம்பரை வேலை. இப்போது நான் தந்த விளக்கத்தால் நீர் நாளைக்கே மரத்தைவிட்டு இறங்கிவிடுவீர் என்று நிச்சயமாக நினைக்கவில்லை. திராவிடம், திராவிடமொழி, திராவிட இனம், எல்லாம் கற்பனைக் கோட்டை என்று கத்துகிருர்களே; அந்தக் குப்பை மேட்டுக் குயில்களின் பேச்சிலே பொதுமக்கள் ஏமாந்து விடக்கூடாதே என்பதற்குத்தான் இதைச் சொல்ல நேரிட்டது. நீங்கள் போகலாம் வாலைச் சுருட்டிக்கொண்டு!

....

அண்ணுவுக்குச் சென்னிமலை பஞ்சாயத்து போர்டு வரவேற்பு

....

11-5-51ல் அறிஞர் சி. என் அண்ணுதுரை எம். ஏ. அவர்களுக்கு இவ்வூர் ஆட்சிமன்றச் சார்பில் ஓர் உபசாரப்பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. மாலை 7 மணிக்கு ஈரோடு தோழர் எஸ் ஆர் சந்தானம் அவர்கள் தலைமையில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடந்தது. அவ்வமயம் அறிஞர் அண்ணுதுரை அவர்கள் இன்றைய ஆட்சிமுறையால் மக்கள் அடைந்துள்ள, அடைந்துவரும் இன்னல்களையும், காங்கிரஸ் ஆட்சியில் நடைபெற்று வரும் ஊழல்களையும், தி. மு. கழகக் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் விளக்கி சுமார் 1 மணி 10 நிமிஷம் ஓர் நீண்ட சொற்பெருக்காற்றினர்கள். பின் தலைவர் முடிவுரைக்குப்பின் நன்றிகூறக் கூட்டம் இனிது கலைந்தது.

அன்றிரவு தோழர் வி. எஸ். ஏ. சபாபதி முதலியார் வீட்டில் உணவு உட்கொண்டுவிட்டு எஸ். ஆர். சந்தானம், ஈ. வி. கே. சம்பத் முதலியவர்களுடன் அண்ணு காரில் ஈரோடு பயணமானுர்கள்.

பார்லிமெண்ட்-சட்டசபை ஸ்தானங்கள்

ஜாமீன் தொகை விளக்கம்

புதுடில்லி, மே 20—

யூனியன் பார்லிமெண்ட் சபையில் ராஜ்யங்களுக்குள்ள ஸ்தானங்களும், ராஜ்ய சட்டசபைகளின் ஸ்தான எண்ணிக்கைகளும், இவற்றில் ஒதுக்கப்பட்ட மக்கள், மலைச் சாதியினர் முதலியோருக்குள்ள ஸ்தான எண்ணிக்கைகளும், யூனியன் அரசாங்கச் சட்ட அமைச்சர் டாக்டர் பி. ஆர். அம்பேத்கார் அவர்களால் பார்லிமெண்ட் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. அதன் விவரம் வருமாறு:—

யூனியன் பார்லிமெண்ட்

ராஜ்யம்	ஸ்தானம்	ஒதுக்கப்பட்டோர்	மலைச் சாதியினர்
சென்னை	75	12	1
மைசூர்	11	2	0
மத்திய பிரதேச	29	4	3
பம்பாய்	45	4	4
உத்தரபிரதேசம்	86	17	0
பஞ்சாப்	18	3	0
சட்டசபைகள்			
சென்னை	375	62	4
மைசூர்	99	20	0
மத்திய பிரதேசம்	232	32	27
பம்பாய்	315	27	29
உத்தர பிரதேசம்	430	83	0
பஞ்சாப்	126	21	0

யூனியன் பார்லிமெண்ட்டுக்குப் போட்டியிடுபவர்கள் ரூ. 500-ம், மாகாணச் சட்டசபைகளுக்குப் போட்டியிடுபவர்கள் ரூ 250-ம் ஜாமீன் தொகையாகக் கட்டவேண்டும் ஒதுக்கப்பட்டோரும் மலைச் சாதியினரும் குறைந்த அளவுத் தொகையை ஜாமீனாகக் கட்டலாம்.

தி. மு. கழக நடவடிக்கைகள்

ஆர்க்காடு: 17-5-51-ல் தி. மு. கழக செயற்குழு கூட்டம் கூடி கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தோழர் மணி வண்ணன் அவர்களைத் திரும்பவும் பொருளாளராக இருக்கவேண்டித் தீர்மானிக்கின்றது. கழக அலுவலகத்துக்கு நெ. 16 செட்டித்தெருவிலுள்ள இல்லத்தை வாடகைக்கு வைத்துக்கொள்ள ஒருமனதாக அபிப்பிராயப்பட்டுதீர்மானிக்கிறது பின், செயலாளர் நன்றிகூறலுடன் கூட்டம் கலைந்தது.

* * *

புளியங்குடி: 15 5-51ல் தி. மு. க. கூடி, முன் இருந்த செயற்குழு உறுப்பினர்களை மாற்றி புது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர் கே. பி. போத்திலிங்கம்; துணை வி. எஸ். இராமசாமி பொருளாளர் கே. இராஜகோபால்; விள. உறு. என். எம். கிருட்டிணன் மற்றும் 10 செயலுறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பொ

இனி நடப்பவை

அரியலூர்:—29-5-51 மாலை 5 மணிக்கு தி. மு. க பொதுக் கூட்டத்தில் பெருமாள் கோவில் முன் அறிஞர் அண்ணா பேசுவார்.

* * *

வளவனூர்:—22-5-51 செவ்வாய் மாலை 6 மணிக்கு நடக்கும் தி. மு. க. பொதுக்கூட்டத்தில் அறிஞர் அண்ணா, ப. உ. சண்முகம் மற்றும் பலர் பேசுவார்கள்.

....

இரத்தவேட்டை

சென்னை, மே 20—

சென்னை புதுப்பேட்டை நூதன நாடக சபாவினர், வாணி வளர் கலைக் கழக சார்பில் 13-5-51-ந் தேதி ஞாயிறு மாலை 6-30-க்கு ஒற்றைவாடைத் தியேட்டரில், சினிமா டைரக்டர் தோழர் எச். எம். ரெட்டியவர்கள் முன்னிலையில் "இரத்தவேட்டை" என்ற நாடகத்தை அதிகத் திறமையாக நடித்தனர்.

இதில் தற்காலத் தனிவுடமைக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரப் பேதா பேதங்களினால், பொதுமக்களிற் பெரும்பாலோராகிய பாட்டாளி மக்களின் உழைப்பும், உதிரமும் ஈவிரக்கமற்ற முதலாளிகளாலும், முதலாளித்துவ மனப்பான்மையுடைய மானேஜர்களாலும் எவ்வாறு வேட்டையாடப் படுகின்றதென்பது விளக்கப்பட்டுள்ளது.

தேயிலைத்தோட்ட மானேஜர் தாண்டவராயனை நடித்த தோழர் எஸ். டி. பாட்சாவின் நடிப்பும், பிறர் நடிப்புகளும் நன்றாக இருந்தன. இந்நாடகத்தில் நகைச்சுவை பகுதியும் சேர்க்கப்பட்டுள்ளது.

தி. மு. கழகப் பொதுக் கூட்டங்கள்

27—5—51

தலைஞாயர்

இராமாமிர்தத்தம்மையார், ஏ. கே. வேலன்.

ஆம்பூர்

ஏ வி. பி. ஆசைத்தம்பி, காஞ்சி கல்யாணசுந்தரம்.

29—5—51

செயங்கொண்டம்

அறிஞர் அண்ணாத்துரை

நாகூர் அனிபா

இசைச்செல்வன்தோழர் அனிபா அவர்கள் 22-5-51 செவ்வாய்க் கிழமை மாலை 6-15 மணிக்கு திருச்சி வானொலி நிலையத்தில் பாடுகிறார்,

பிற்போக்குத் தன்மை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களை வரவேற்கிறேன் வணங்குகிறேன்.

தோழர்களே!

சமூக சீர்திருத்த மாநாடு கூடும் இத் திண்டிவனம் சார்ந்து நிற்கும் தென்னார்க்காடு மாவட்டம் மற்றெம் மாவட்டத்தைக் காட்டிலும் எல்லாத் துறைகளிலும்பிற்போக்கி லுள்ளதெனக் கூறின் அது உள்ளதை மறைத்துக் கூறுவதாகாது. முன்னேற்றத் துறைகள் எவை எவையோ அவையனைத்திலும் தாழ்ந்துகிடப்பது இம்மாவட்டம். எனவே இத்தகு பிற்பட்ட மாவட்டத்தில்நம் மாநாடு கூடுதல்சாலவும் சிறப்புடையது என்பதோடு, இது பெருத்த அளவில் இம்மாவட்ட மக்கள் விழிப்புக்குத் துணை செய்ய வேண்டுமென நம்புகிறேன்.

தோழர்களே!

தென்னார்க்காடு வாசிகள் நாடியைத் தொட்டுப் பார்த்தவன்—அவர்களுள் ஒருவன்—அவர்கள் கருத்தைத் பிரதிபலிக்க உரிமையும் போக்பதையுமுடையவன் என்ற முறையில் ஒன்று கூற ஆசைப்படுகிறேன்.

இது வைதீகம்—வஞ்சம்-வெற்றுரவாரம்—பயனில்லா வீரம் செறிந்த மாவட்டமன்று. முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையான மேற்கண்ட வெறிப்பண்புகள் தாண்டவமாடிய வட்டாரப் பகுதிகளையெல்லாம் வெற்றிகண்டு வருகிறது அறிவியக்கம். இதனிடம் கடியவேலை இயக்கத்துக்கு இருக்க முடியாது. தென்னாற்காட்டில் வெறியாட்டங்கள் கிடையாது வஞ்சகத் தலையாட்டம் இல்லை. இங்கு உள்ளதெல்லாம் அடிப்படை கல்வியறிவு இல்லாக் காரணத்தால் இயற்கையில் இருந்து வரும் பிற்போக்குத் தன்மைமட்டுமேயாகும். இப்பொதுவான பிற்போக்குத் தன்மை எந்தவகையிலும் எதிர்த்துப் போராடுவதற்குக் கடினமானதன்று. சமுதாயத்தில் தலைகீழ் மாற்றமேற்படுத்தி புதியதொரு சமுதாயத்தைச் சமைக்கப் புறப்பட்டிருக்கும் நமக்கு இப்பிற்போக்குத் திரையைக் கிழிப்பது எளிதும், இயல்வதுமாகும். முறியடிக்கப்பெறாது விடப்படும் பிற்போக்குத்தன்மை முரட்டுத்தனமாக மாறி—வெளியாகி— வீணே நாட்டை அலக்கழித்து அவலநிலைக்குள்ளாக்குமென்பது நாமெல்லாம் தெரிந்ததாகும்.

எனவே, நம் அறிவியக்கம் சமூக முன்னேற்றத் தொண்டு-தென்னாற்காட்டில் பெருத்த அளவில் பாய்ச்சப்பெற வேண்டுவது அவசியமும் அவசரமுமாகும். தென்னாற்காடு வாசியின் பிற்போக்கு மாசினைத் துடைத்து மனிதராக்கிவிட்டால் உண்மை உணர்வுபகரும் அம்மனிதர் அறிவியக்கத்தின் முன்னோடு வீரராக, தியாகத் தழும்புகளைத் தித்திப்போடு ஏற்கும் தீரராக எதையும் தாங்கும் இதயம் படைத்தவராக மாறிவிடுவார்-மாறும் மனவளமுண்டு அவருக்கு என உறுதி கூறுகிறேன்.

அறிவியக்கத்தின், திட்டம் போட்ட பரீட்சார்த்த வேலைமுறை எதனையும் தென்னாற்காட்டில் துணிந்து செய்யலாம். தென்னாற்காடு திறமையாக நடந்துகொள்ளும் —திருப்தியாக பதிலளிக்கும். ஈதொன்றே எளியேன் சொல்ல விழைந்தேன் சொல்லிவிட்டேன். அறிஞர் அண்ணா அவர்களை இது கவர்ந்திருக்குமாகில், தென்னாற்காட்டுக்கு அதன்வழி திராவிடத்துக்கு 'நல்லகாலம்' என்றே சொல்ல வேண்டும்.

பெரியோர்களே!

எங்களாலியன்ற அளவுக்கு மாநாட்டு ஏற்பாடுகள் புரிந்துள்ளோம். குறைபாடுகளிருக்கலாம். காரிய நாட்டமே நமக்குப் பெரியதாகையால் இவற்றையெல்லாம் கருத மாட்டீர்களென நம்புகிறேன். சமூக சீர்திருத்த மாநாடு செம்மையாய் நடைபெறுதல் வேண்டும். மாநாட்டின் விளைவாய் மகத்தான சாதனைகள் மலரவேண்டும் இதற்கு உங்கள் ஆய்வுரையும் ஒத்துழைப்பும் தேவை. பெருமளவுக்குத் தேவை. "வருக" வென வரவேற்று வணங்கி அமர்கிறேன்.

வளர்க தன்மானம்!

வாழ்க அறிவியக்கம்!!

....

பாலிலிருந்தும் சோளத்திலிருந்தும் ரப்பர்

பாலிலிருந்தும், சோளச் சர்க்கரையிலிருந்தும் ஒரு புதியஉயர்ந்த ரக ரப்பரை அமெரிக்க விவசாய இலாகா விஞ்ஞானிகள் தயாரித்திருக்கின்றனர். இதன் பெயர் "லாக்டோபிரின் பீஎன்" இந்த ரப்பர் சில உபயோகங்களுக்கு இயற்கை ரப்பரையும் மற்றச் செயற்கை ரப்பர்களையும் விடச் சிறந்ததாக இருக்கிறது.

இந்த ரப்பர் அதிக உஷ்ணத்தையும் மிகுந்த குளிர்ச்சியையும் தாங்கக் கூடியது. தண்ணீர், எண்ணெய் முதலியவை புக முடியாததுமோட்டார்கார்களிலும், குளிரூட்டும் பத்திரங்களிலும், எண்ணெய் டாங்குகளிலும் இந்த ரப்பர் மற்றவைகளை விட உயர்ந்ததாகப் பயன்படும் என்று அமெரிக்க விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

குமரிகளை வெறுக்கும் கடவுள்

கோட்டயம், மே 19—

ஓராண்டுக்கு முன் எவராலோ நிர்மூலமாக்கப்பட்ட சபரிமலை ஐயப்பன்கோயில் புதிதாகக்கட்டப்பட்டு நேற்று அதில் ஐயப்பசாமி அமர்த்தப்பட்டது. மேற்குத் தொடர்ச்சி மலையில் திருவாங்கூர்ப் புறத்தில் அடர்ந்த ரிசர்வ் காட்டின் நடுவில் சபரிமலை இருக்கிறது இக்கோயிலுக்கு 10 வயதிலிருந்து 56 வயதுவரையுள்ள மாதர்கள் போகக் கூடாதாம். இவ்வாறு ஒரு தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இக்கடவுளுக்குக் குமரிகள் பிடிக்காதுபோலும்.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45 Muthumari Chetty Street, Madras-1.